செய்தி வெளியீடு எண்.523 நாள் 18.12.2006

## செய்தி வெளியீடு

## ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் சாதனைகள் படைத்த தமிழக வீரர்களுக்கு மொத்தம் ரூ.60 இலட்சம் பரிசு

## முதலமைச்சர் கலைஞர் வழங்கினார்

தோஹாவில் நடைபெற்று முடிந்துள்ள பதினைந்தாவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்திய அணியில் இடம் பெற்றுத் தமிழகத்தின் சார்பில் கலந்து கொண்டு சாதனைகள் படைத்த வீரர்களில், தடகளப் பிரிவில் மகளிருக்கான 800 மீட்டர் ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கம் வென்ற புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த வீராங்கனை சாந்திக்கு 15 இலட்சம் ரூபாயும், சதுரங்கப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற சென்னையைச் சேர்ந்த வீரர் சசிகிரன்கிருஷ்ணனுக்கு 20 இலட்சம் ரூபாயும், வீராங்கனை அஞ்சு பி. ஜார்ஜ் நீளம் தாண்டுதல் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றமைக்கு 15 இலட்சம் ரூபாயும், ஸ்குவாஷ் ஒற்றையர் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற வீரர் சௌரவ் கோசலுக்கு 10 இலட்சம் ரூபாயும் பரிசுத் தொகையாக வழங்கப்படும் எனத் தமிழக அரசினால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

அந்த அறிவிப்பின்படி இன்று (18.12.2006) தலைமைச் செயலகத்தில், தோஹா ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் சாதனைகள் படைத்த தமிழக விளையாட்டு வீரர்களான சசிகிரன்கிருஷ்ணனுக்கு 20 இலட்சம் ரூபாயையும், அஞ்சு பி. ஜார்ஜுக்கு 15 இலட்சம் ரூபாயையும், சாந்திக்கு 15 இலட்ச ரூபாயையும், சௌரவ் கோசலுக்கு 10 இலட்சம் ரூபாயையும் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கி தமது பாராட்டுகளைத் தெரிவித்தார்.

தடகளப்போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற வீராங்கனை சாந்தியின் பெற்றோர்கள் தம்வீட்டில் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாததால் தமது மகள் தோஹாவில் நிகழ்த்திய சாதனையைக் காணமுடியாமல் போனது எனக் கூறியதன் அடிப்படையில், வீராங்கனை சாந்திக்கு வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டி ஒன்றையும் முதலமைச்சர் கலைஞர் பரிசாக வழங்கினார்.

இந்நிகழ்வின்போது உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.க.பொன்முடி, இளைஞர் நலம் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு.டி.பி.எம்.மொய்தீன்கான், விளையாட்டுத் துறை செயலாளர் திரு.அம்பேத்கர் ராஜ்குமார், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர்–செயலர் செல்வி அபூர்வா ஆகியோர் உடனிருந்தனர்.

வெளியீடு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9